திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் வெளி மாநிலச் சீட்டுக்கள் எவ்வளவு விற்பனை ஆகின்றன? நம்முடைய மாநிலத்திலே இருந்து எவ்வளவு தொகை வெளியே போகின்றது? அதேபோல் நமது சீட்டுகள் வெளி மாநிலங்களில் எவ்வளவு விற்பனை ஆகின்றன என்ற கணக்கு இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா.வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு தமிழ்நாட்டுப் பரிசுச் சீட்டுக்கள் வெளி மாநிலங்களில் விற்பனை ஆகின்றன, எவ்வளவு வெளி மாநிலச் சீட்டுக்கள் இங்கே விற்பனை ஆகின்றன என்ற விவரம் இல்லை. ஆனால் தமிழ்நாடு பரிசுச் சீட்டின் மூலமாக 51 இலட்சத்து 22 ஆயிரம் ரூபாய் வருமானமும், வெளி மாநிலப் பரிசுச் சீட்டுக்களின் மூலமாக 32,60,058 ரூபாய் வருமானமும் தமிழக அரசுக்கு வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு குதிரைப் பந்தயத்தை ஒழித்ததுபோல் வருகிற ஆண்டில் சாராயக் கடைகளை ஒழிக்க இருப்பது போல் இந்த பரிசுச் சீட்டுக்களை ஒழிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா, வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கருத்து அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோழித் தீவனத்திற்கு வரிச் சலுகை

734—(*வினா எண். 8573)—திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோழித் தீவனத்திற்கு 5 சத விகிதம் வரியை ரத்து செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: (அ) மற்றும் (ஆ) 1986–87 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின்படி 17–3–1986 முதல்தான் கோழித் தீவனத்திற்கு 5 சதவிகிதத்திலிருந்து 2 சத விகிதமாக வரி குறைக்கப்பட்டுள்ளது. கோழித் தீவனத்திற்கு முழுவதும் வரியை ரத்து செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

1986 மே 10]

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 1986–87 நிதிநிலை அறிக்கையில் 5 சதவீதத்தை 2 சதவீதமாகக் குறைத்து இருப்பதாக இங்கே சொன்னார்கள். கோழி வளர்ப்பது குடிசைத்தொழிலாகத் தமிழகத்தில் செய்யப்பட்டு வருகிறது. எனவே இந்த 2 சதவீத வரியையும் அறவே நீக்கி அந்த வகையில் வரி விலக்கு அளிக்க அரசின் பரிசீலனை இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோழி வளர்ப்பது என்பது குடிசைத்தொழில் என்ற அடிப்படையில்தான் 5 விழுக்காடு பலமுனை விற்பனை வரி என்று இருந்தது. 4–3–1984 முதல் 5 விழுக்காடு ஒருமுனை விற்பனை வரியாக மாற்றப்பட்டது. அதன் பின்னர் 17–3–1986-ல் அது 2 சதவீத ஒருமுனை விற்பனை வரியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதனை மேலும் குறைக்கின்ற பரிசீலனை அரசினிடத்தில் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தோல் பொருட்களுக்குத் தனி தொழிற்பேட்டை

735—(*வினா எண் 6184)—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாட்டு ஏற்றுமதிக்காக தோல் பொருட்களை உற்பத்தி செய்யும் தனி தொழிற்பேட்டையை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது.

மாண்புமிகு திரு ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 10–20)

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விடையில் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இருந்தாலும் பரவாயில்லை. மாதவரத்தில் இதே மாதிரி ஒரு தோல் தொழிற் பேட்டை இருக்கிறது. அங்கு எத்தனை தொழிற்கூடங்கள் இருக்கின்றன? அந்தத் தொழிற்கூடங்களிலிருந்து வெளிநாடுகளுக்கு என்னென்ன பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அதனால் கிடைக்கக் கூடிய அந்நியச் செலாவணி எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்